# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **131/2015**

ஆணை எண். **189/2016**

நாள் : **03/12/2016**

**திதிரு. வி.எஸ். அருணாச்சலம்,**
**கொரட்டூர்,**
**சென்னை – 80.** **– முறையீட்டு மனுதாரர்**

**உதவி ஆணையாளர்,**
**மதுரை மாநகராட்சி,**
**மதுரை.** **– எதிர் மனுதாரர்கள்**

சென்னை, கொரட்டூர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, 2–வது தெரு, எண்.1/50 முகவரியில் வசிக்கும் திரு. வி.எஸ். அருணாசலம் அவர்களின் 27.06.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.06.2015 அன்று பெறப்பட்டு 131/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, கொரட்டூர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, 2–வது தெரு, எண்.1/50 முகவரியில் வசிக்கும் திரு. வி.எஸ். அருணாசலம் என்பவர், மதுரை, கோரிப்பாளையம், கதவு எண்.106 D மற்றும் பழைய நில அளவை புல எண்கள் 1259 மற்றும் 1260 நகர நில அளவை எண். 4771 எண்ணிட்ட சொத்தை 24.11.2010 நாளிட்ட ஆவண எண்.4608/2010–ன் மூலம் கிரயம் பெற்றுள்ளார். மனுதாரருக்கு கிரயம் மூலம் விற்பனை செய்யப்பட்ட மேற்படி சொத்து, கிரயம் செய்து கொடுத்தவர்களுக்கு 1919 மற்றும் 1920 ஆம் ஆண்டுகளிலிருந்து கிரயம் மூலம் அனுபவத்தில் இருந்து வந்துள்ளது என்றும் 819 எண்ணிட்ட பட்டா அவர்கள் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரயம் பெற்ற மேற்படி சொத்து மதுரை வடக்கு வட்டாட்சியரின் 25.01.2011 நாளிட்ட ஆர்.டி.ஆர்.534/D3/2011–ன் மூலம் மனுதாரர் பெயரிலும் பட்டா மாறுதல் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி கணக்குகளிலும் தக்க மாறுதல்களைச் செய்வதற்கு, மேற்படி பட்டா மாறுதல் செய்து ஆணையிடப்பட்ட கடிதம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் 30.03.2015 நாளிட்ட கடிதம் எண். Z2A9/08956/2015–ல் மதுரை மாநகராட்சி 2–வது மண்டல உதவி ஆணையர் அவர்கள் கோரிப்பாளையம் தர்க்கா பெயரில் உள்ள மேற்படி சொத்து வரிவிதிப்பு எண்.28120 இரத்து செய்துள்ளதாக மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். வரிவிதிப்பு எண்.28120–ல் தவறாக குறிப்பிடப்பட்ட கோரிப்பாளையம் தர்க்கா பெயரை நீக்கம் செய்த பின்பு தனது பெயரை மேற்படி சொத்து வரிவிதிப்பு எண்ணில் சேர்க்கப்படவில்லை என தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மதுரை மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரருக்கும், வஃபு வாரியத்திற்கும் இடையே மேற்படி சொத்து சம்பந்தமாக சில உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும், 1995–ஆம் ஆண்டு வஃபு வாரிய சட்டப்பிரிவு 40–ன் கீழ் இச்சொத்து சம்பந்தமான பிரச்சினையை தீர்த்துக்கொள்ளுமாறு வழக்கு எண்.1562/2012–ல் சென்னை உயர்நீதிமன்றம் 11.12.2012 அன்றுதீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து 28.06.2015 நாளிட்ட வஃபு வாரிய தீர்மானம் எண்.154/2013–ல் மேற்படி சொத்து கோரிப்பாளையம் தர்க்காவிற்கு பாத்தியப்பட்டது என முடிவு செய்த நிலையில் சொத்துவரி விதிப்பு எண்கள்28120 மற்றும் 28121 தர்க்கா பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும் மேற்படி வஃபு வாரிய தீர்மானத்தினை எதிர்த்து மனுதாரர் WOP No.01/2015 எண்ணிட்ட வழக்கினை மதுரை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில் **28.09.2016** அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, மனுதாரர் தன்பெயரில் உள்ள வரிவிதிப்பினை தர்க்காவின் பெயரில் மாற்றம் செய்து நிலுவைத்தொகையைப் பெற்றுள்ளனர் என்றும், வஃபு வாரியத்திற்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என்ற கல்வெட்டு ஆதாரத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 12.06.2015 நாளிட்ட கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் 35687/K-4/2015 எண்ணிட்ட சுற்றறிக்கையினையும் விசாரணையின்போது சமர்ப்பித்தார். மேற்படி சுற்றறிக்கையில்,

> *"After the Inam / minor Inam tenures were abolished by the relevant statutes and ryotwari settlement was introduced, the Title Deeds and I.F.R. are having only historical value. However, the R.D.O. and D.R.O. without applying their mind and without verifying the Settlement records which are available in the Collectorate have unnecessarily interfered with the decision made in the Settlement."*

எனக்குறிப்பிடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். மேலும் வஃபு வாரிய தீர்மானத்தினை எதிர்த்து மதுரை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வஃபு அசல் மனு எண்.01/2015 தாக்கல் செய்ததையும் அவ்வழக்கின் 601/2015 எண்ணிட்ட இடைக்கால மனுவில் 22.08.2016 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளதையும் குறிப்பிட்டு தீர்ப்பின் நகலினையும் விசாரணையின்போது மனுதாரர் தாக்கல் செய்தார். மேற்படி இடைக்கால மனுவில் வழங்கிய தீர்ப்பில்

> *" எதிர் மனுதாரர் (மேனேஜிங் டிரஸ்டி வஃபு வாரியம்) தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முன்தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருள் தரக்கூடியதாக இல்லை என்றும் வழக்கின் ஆவணம் மற்றும் வழக்கை பரிசீலிப்பதின் அடிப்படையில் மனு சொத்து ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் (திரு.வி.எஸ். அருணாசலம்) முன் உரிமைதாரரை தொடர்ந்து மனுதாரருக்கும் பாத்தியப்பட்டு அவரின் அனுபவத்தில்தான் உள்ளது என்பது புலனாவதால் மனுதாரருக்கு முதல் தோற்ற வழக்கும், சமநிலை வாய்ப்பும் உள்ளதாக தீர்மானித்து இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது "*

எனத் தெரிவித்து, மனுதாரர் தன் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது எனக் கோரிய உறுத்துக்கட்டளையை உறுதி செய்துள்ளது. எனினும் மனுதாரரின் அசல் மனு எண்.01.2015 இன்னும் தீர்வு செய்யப்படாமலேயே உள்ளது.

4. மேலே கூறப்பட்ட சூழ்நிலையில் மதுரை முதன்மை சார்பு நீதிமன்றம், மனுதாரரின் இ.ம.எண்.601/2015–ல் 22.08.2016 நாளன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் அசல் மனு எண்.01/2015–ல் வழங்கப்படவுள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் தாமதமின்றி செயல்பட இம்முறைமன்றம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு [illegible]ப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

திரு. வி.எஸ். அருணாச்சலம்,
எண்.1 / 50, தமிழ்நாடு மின்வாரிய குடியிருப்பு,
2–வது தெரு, கொரட்டூர்,
சென்னை – 80.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.